தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 ஆடவை (10-6-1987) 85 காசுகள் (இதழ் எண்: 87)

இந்தியா செய்த உணவு உதவிகள்! இராசீவின் இரண்டாவது நாடகம்!

அழிபட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு உணவு, மருந்து, உதவுவது வஞ்சகமான ஒரு சூழ்ச்சியே!



சிங்களவர்களிடம் தமிழர்கள் நேரடியான போரில் அழிபட்டுச் செத்துக் கொண்டிருப்பது கடந்த நான்கு ஆண்டுகளாக நாளுக்கு நாள் தொடர்ந்து நடந்து வரும் ஒரு செய்தியாகும். இதில் இவ்வளவு நாள் இல்லாத அக்கறை இராசீவுக்கு அஃதாவது இந்தியாவுக்கு இப்பொழுது ஏற்பட்டிருப்பது ஒரு காலத்தின் கோளாறே ஆகும். இந்தியாவின் **இரண்டாவது நாடகம் இது!** முதல் நாடகம் **திம்புப் பேச்சு** தொடங்கிப பல காட்சிகளாக நடந்தேறியது அனைவர்க்கும் தெரியும். முதன் முதல் தொடங்கிய திம்புப் பேச்சிலிருந்து, இறுதியாக நடந்த கொழும்புப் பேச்சு வரை, **தமிழ்நிலம்** அந்த நாடகத்தைத் தெளிவாகவும், யாரையும்விட நன்றாகவும், நேர்மையாகவும், நடுநிலையாகவும் திறனாய்ந்திருந்தது. பலர் தொடக்கத்தில் **தமிழ்நிலம்** கருத்துக்கு ஒத்துவரவில்லையானாலும், போகப் போக அவரவர்களின் கருத்துப் போலத் **தமிழ்நிலம்** கருத்தையே முடிந்த முடிவாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது—அவர்கள் ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளவில்லையானாலும், தெரிந்து சொன்னாலும், தெரியாமலே சொல்லி வந்தாலும், அவையெல்லாமும்—தமிழின நலத்தைப் பொறுத்த வகையில்—தமிழ்நிலத்தின் தெளிவான சிந்தனையையும், முன்னறிவுத் திறனையுமே காட்டுவதாக அமையும். அது போலவே, இப்பொழுது தமிழீழத் தமிழர்-

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

ஐயோ தமிழகமே!

தேர்ந்தெடுத்த மக்களுக்குத் திறனாய உரிமையில்லை!

அரசாள வருபவர்கள் மக்களின் நலனை முன்வைத்துச் செயல்களை அமைத்துக் கொள்வதுடன் தங்கள் தனிப்பட்ட நலன்களில் அக்கறை செலுத்துவது உரிமை இந்தியாவின் இயல்புப் போக்காகச் சிறிது காலத்திற்கு முன்பே மாறி விட்டது. 'தேனெடுப்பவன் புறங்கையை நக்குவான்' என்பதெல்லாம் இதற்குச் சப்பைக்கட்டு ஞாயங்களாக நிறுவப்பட்டது. இப்போது வெளிப்படையாகவே மக்களின் உரிமை நலன்களைச் சிதைத்துவிட்டுத் தங்கள் நலன்களில் அக்கறை காட்டத்தொடங்கிவிட்டனர், அரசு என்ற போர்வையில் அடங்கியுள்ள குட்டிப் பூசாரிகளான சட்ட மன்ற உறுப்பினர்கள். அவை அடிப்படை உரிமைகளை மக்களிடமிருந்து பறிக்க எள்ளளவும் தயக்கம் காட்டவில்லை. தங்களைத் தாங்களே மிகுதியாக மதித்துக்கொள்ளத் தொடங்கிவிட்டனர். இவர்களைத் திறனாய்வு செய்வதைக்கூட இவர்கள் விரும்புவதில்லை. தேர்ந்தெடுத்த மக்களுக்குத் திறனாய உரிமையில்லையா ?

மக்கள் வெறுப்பதற்கு மக்கள் வரிப்பணம் எதற்கு?

தொலைக்காட்சியில் போடப்படும் நிகழ்ச்சிகள் மொழி புரியாதனவாகவும், ஒருசார் கலைப் பண்பாடுகள் வலியுறுத்தித் திரும்பத் திரும்பக் காண்பிக்கப்படுவனவாகவும் சலிப்புறத்தக்கனவாகவும் வெறுப்பூட்டுவனவாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு அமைவது பற்றி இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ், 'வெறுப்பூட்டுவதாக இருந்தால் **தொலைக்காட்சியை நிறுத்திவிடுங்கள்'** என்ற பொறுப்பான விடையைக் கூறியிருக்கிறார். மக்களின் கோடிக்கணக்கான வரிப்பணத்தில் தொலைக் காட்சியை அரசு நடத்திக் கொண்டு, விளம்பரப் பணத்தால் தொலைக்காட்சித் துறையைக் கொழுக்க வைக்கும் அரசு மக்களுக்குத் தேவையான—இந்த நாட்டிற்கு உதவியான—மக்களால் விரும்பப்படுகிற-சுவையான-இந்நாட்டின் அனைத்துக் கலைப் பண்பாடுகளுக்கும் உரிய நிகழ்ச்சிகளை மக்கள் பாகுபாடின்றிப் பரவலாக ஒளிபரப்பத் தவறும் இந்த இந்திய அரசு 'தொலைக் காட்சியை நிறுத்திவிடுங்கள்' என்று கூறுவதின் உள்நோக்கப் பாகுபாட்டை மக்கள் என்றைக்கு விளங்கிக் கொள்வார்களோ ?

இந்து முன்னணியின் பின்னணி!

திராவிடர்க்கழகம் நடத்தும் 'சமூக நீதி' மாநாட்டில் குடியரசுத் தலைவர் கலந்துகொள்வதை எதிர்த்து, தஞ்சையில் கருப்புக் கொடி காண்பிக் போவதாக இந்து முன்னணி கூறியது.

"திராவிடர்க் கழகம் இந்துக்களுக்குப் பகையானதால் தேசப் பகையான அமைப்பு என்றும், இந்தியாவின் குழப்ப ஆற்றல்களான முசுலீம்களையும், கிறித்தவர்களையும் திராவிடர்க் கழகம் ஆதரிப்பதால் அது நடத்தும் மாநாட்டில் குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளக்கூடாது" என்றும் இந்து முன்னணி மாநிலச் செயலாளர் கூறியுள்ளார். "இந்துக்கள்தாம் இந்தியா! நடுநிலை நாடு என்பதற்கு இந்துக்கள் நாடு என்பதுதான் பொருள். இந்தியக் குடியரசுத் தலைவர், இந்திய அரசியல் அமைப்பு என்பதெல்லாம் இந்துக்களுக்கு மட்டும்தான் பொருந்தும்" என்று இந்து முன்னணியினர் குறிப்பாகக் கூறிக்கொண்டிருப்பதைவிட வெளிப்படையாக அறிவித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! தமிழனத்திற்கு உணர்ச்சியூட்டுவதற்கு இந்து முன்னணியினரும் எவ்வளவு முயற்சியெடுத்துக் கொள்கின்றனர். தமிழினம் புரிந்து கொள்ள வேண்டுமே! —குன்றன்

கல்வி ஏன் இல்லை?

தமிழ் நாட்டில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் 25 இலக்கம்பேர் வேலைக்காகப் பதிவு செய்துள்ளனர். இவர்களில் 5 இலக்கம் பேர் பெண்கள். $1\frac{1}{2}$ இலக்கம் பட்டதாங்கிகள், 2,500 மருத்துவர்கள், 5000 பொறியாளர் இதில் அடங்குவர். இவ்வாறு தமிழ்நாடு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் கூறியுள்ளார். தமிழ் நாட்டில் புதிதாகத் தொழில் தொடங்க இயலாத (தில்லியரசுக்கு மனமில்லாத) நிலையில் இவ்வளவுபேர் பதிவு செய்துள்ளதால்தான் எல்லாருக்கும் கல்வி என்பதை மறுக்கின்ற புதிய கல்விக் கொள்கை அறிமுகப் படுத்தப்படுகிறதோ? இதனால்தான் மக்கள் தொகைக் குறைப்பு முயற்சி பெருமளவில் நடைபெறுகிறதோ ?

கொள்ளையர்கள் யார்?

சைதை சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் 'திருடர்கள், கொள்ளைக்காரர்களை மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ள அவர்களின் முகத்தில் பச்சை குத்த வேண்டும்' என்று சட்ட மன்றத்தில் கூறியுள்ளார் அப்படிப் பச்சை குத்துவதால் கொள்ளையர்களை இந்தக் குமுகாயம் புறக்கணிக்கும். எனவே அவர்கள் திருந்தவே வாய்ப்பில்லாது தொடர்ந்து குற்றம் செய்யவே தூண்டும்' என்பதையெல்லாம் அவர் அறியவில்லை போலும். அப்படியே பச்சை குத்துவதென்றாலும் முதலில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பச்சை குத்த வேண்டியிருக்குமே! அதற்கு அவர்கள் அணியமா ?

—தமிழ்முகிலன்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

களின் மேல் திடுமென அக்கறை காட்டி, உணவுப் பொருள்களையும், மருந்துகளையும் இந்தியா உதவிய தும் ஒரு பச்சையான வஞ்சக, கரவான நாடகம் என்பதையும், இப்பொழுது இந்த உதவியை வரவேற்று நிறைவடையும் தமிழ்த் தலைவர்களும், வடபுல அரசியல் எதிர்க் கட்சித் தலைவர்களும், ஏன்—தமிழீழப் போராளிகளும் கூட — இதன் உண்மையை — விரைவில் உணரவே செய்வர்! இ்து ஒருபுறம் இருக்கட்டும்.

தமிழீழ நேரடிப் போராட்டம் தொடங்கிய 1983-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, இந்திய அரசினரின் கணக்குப்படியே வைத்துக் கொள்வதானாலும் ஏறத்தாழ பத்தாயிரம் தமிழர்கள்—ஏதும் அறியாத பொதுமக்கள்—இலங்கையில் மாண்டு படிந்திருக்கின்றனர். உண்மைக் கணக்கில் இத்தொகை இரண்டு மூன்று மடங்காகப் பெருகியிருந் தாலும் வியப்படைவதற்கில்லை. இன்றைய நிலையில் இலங்கைச் சிறைகளிலும் படைத்துறைப் பாசறைகளிலும் 5000-க்கும மேற்பட்டவர்கள் பணயச் சிறையாளிகளாக உள்ளனர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை, அங்குள்ள தமிழர்கள் மேல் நடத்திய இத்தனை அழிம்புகளுக்கும், அழிவுகளுக்கும் இந்தியாவும் பங்கேற்க வேண்டும் என்பதை வரலாறு மறக்காது; மன்னித்தும்விடாது. இவ்வகை நடவடிக்கைகளால் *இராசீவும் செயவர்த்தனாவும் தமிழர்களுக்கு எதிரான இரட்டைப் பிறவிகள்* என்பது வெளிப்படையானது. இராசீவ் ஏற்படுத்திக் கொடுத்த கால இடைவெளியே, செயவர்த்தனாவை இந்த அளவுக்கு வலிவடையவும் அகங்காரம் கொள்ளவும் செய்தது எனில் அது வெறும் வெற்றுக் குற்றச் சாட்டாகாது என்பதை உண்மையிலேயே தமிழின நலம் நாடும் நடுநிலையாளர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இப்பொழுதும் இராசீவ் தொடங்கி நடத்திய உணவு, மருந்து உதவிகளும் ஒரு பொய்யான—போலியான நடவடிக்கையே என்பதைக் கீழ்வரும் விளம்பர ஆரவார உத்திகள் விளக்கும்:

தொடக்கத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு உதவப் போவதாக விளம்பரப் படுத்தப் பட்ட பொருள்கள் ஏறத்தாழ 3000 கல்லெடை (டன்) களாகும்! (1-6-87-ஆம் நாளைய செய்திப்படி.) அஃதாவது 1000 க. எ. அரிசி, 1000 க. எ. சருக்கரை; 1000 க. எ. பருப்பு, பிற உணவு வகைகள், மற்றும் பிறவும்—ஆகும். பின்னர் 2-ஆம் நாளைய செய்திப் படி அஃதாவது விளம்பரப்படி இந்த மூவாயிரம் கல்லெடை ஏறத்தாழ 1000 கல்லெடைப் பொருள்களாகக் குறைந்தன. 1000 க. எ. அரிசி, 850 க. எ. வானது. பருப்பு 50, உப்பு 5, காய்கறிகள் 8, உணவெண்ணெய் 18, புளி 150, சருக்கரை 100 க. எ. முதலியனவாகக் கழுதை தேய்ந்து கட்டெறும்பாயின. இறுதியாக 4-6-87-இல் உண்மையிலேயே வானூர்தி வழியாகச் சாய்க்கப்பட்ட பொருள்கள் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வெறும் 22·5 கல்லெடைப் (டன்) பொருள்களே ஆகும்! மலைபோல் விளம்பரம்! மண்ணாங்கட்டியளவு உதவி! (உதவுவதற்காகக் கொண்டு சென்ற மீதி 2980 கல்லெடை உணவுப் பொருள்களும் என்ன ஆயிற்றோ? தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்குதுறை அதிகாரிகள், ஆட்சித் துறையினர், மற்றும் மொய்த்ரா பேரவும் நடுவணரசுத் துறை அதிகாரிகள் போன்றவர்களுக்குத்தான் வெளிச்சம்!)

அதுவும் ஏறத்தாழ 30 இலக்கம் பேர்கள் வாழ்கின்ற இலங்கையில், ஏறத்தாழ 10 ஆயிரம் பேர் வாழும்—யாழ்ப்பாணப் பகுதிகளான ஆனைக் கோட்டை, உரும்பிராய், வடமாராச்சி, காங்கேசன் துறை, சாவகச் சேரி, சுன்னாகம் ஆகிய ஐந்து, அல்லது ஆறு ஊர்ப் பகுதிகளில் மட்டுந்தாம் உணவுப் பொருள்கள் போடப் பெற்றன. இனி, போடப்பெற்ற பொருள்களும் அஃதாவது பொட்டலங்களும்—மரங்களின் உச்சியிலும், வீட்டுக் கூரைகளிலும், மக்கள் வாழாத வெட்டவெளிகளிலும், அவர்கள் நடமாடாமல் படைத்துறையினரே நடமாடிக் கொண்டிருக்கும் தெருக்களிலும் விழுந்தன. விழுந்த உணவுப் பொருள் சிப்பாய்களும் படைத்துறையினரே எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும்படி விழுத்தப் பட்டிருந்தன. இனித் தப்பித் தவறிப் பொதுமக்கள் கைகளில் கிடைத்த பல பொருள்களையும் சிங்களப் படைத்துறை வீரர்களே அடித்துப் பறித்துக் கொண்ட செய்திகளும் நமக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளன. இந்நிலைகளையெல்லாம் பற்றி என்ன செய்வது? எவ்வாறு மதிப்பிடுவது? ''பிச்சை' கொடுத்ததாம் பெருமாளு; அதைப பிடுங்கினதாம் அனுமாரு' என்று சொல்வார்களே, அப்படிச் சொல்வதா? இல்லை, 'அனுமாரு பிடுங்கும் என்று தெரிந்தும் பெருமாளு' 'பிச்சை' கொடுத்தது' என்பதா? இனி, 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்றபடி, இலங்கைத் தமிழர்க்கு இராசீவ் தந்த 'இத்தனையூண்டு' உதவியையும் பெறுமல் பெற்ற தமிழர்களுக்கு, மேலும் கிடைத்தது உயிர்ச்சேதந்தான்! உதவி கிடைத்த அரைமணிக்குள்ளாகவே 20 தமிழர்கள் உயிரோடு எரிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இனி, உண்மையிலேயே அங்குள்ள தமிழர்களுக்குச் 'செய்தக்க' உதவியைச் செய்யாமல், செய்யத் தேவையில்லாத—காலத்தால் செய்யாத—இப்புல்லிய—பயனற்ற உதவியை இராசீவ் ஏன் செய்ய வேண்டும்? அவர் கருத்துதான் என்னவாக இருக்கும்? (தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

செய்திகள்-சிந்தனைகள்!

தாங்கள் செய்த தவறுக்குத் தாங்களே அளித்துக் கொண்ட தண்டனை !

தென்கொரியாவில் மாணவர் ஒருவரைக் காவல் துறையினர் உசாவலின் பொழுது அடித்துத் துன்புறுத்திக் கொன்றனர். இது தொடர்பான குற்றச்சாட்டு அமைச்சரவைக்கு வந்தது. காவல் துறையினர் செய்த இக் குற்றத்துக்குத் தாங்களே பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறி, தலைமையமைச்சரும் அவருடன் சேர்ந்த 25 அமைச்சர்களும் தம் பதவிகளிலிருந்து விலகிக் கொண்டனர். தென்கொரியக் குடியரசுத் தலைவர் சுன்டு அவான் அவர்களுள் தலைமையமைச்சர் மற்றும் ஏழு அமைச்சர்களின் பதவி விலகல்களை மட்டும் ஏற்றுக் கொண்டார். இந்திய அமைச்சர்களில் எவருக்கேனும் இந் நடுநிலையுணர்வும், பதவியாசையின்மையும், நேர்மையும் துணிவும் வருமா? ஐயமே!

சிற்றூர் மக்களின் கட்டுப்பாடு !

கருநாடக மாநிலம் காளிஅள்ளி என்னும் சிற்றூரில் உள்ள சன்னையா என்னும் உழவர் தம் நிலத்தை நிலவள வைப்பகத்தில் ஈடு வைத்துக் கடன் வாங்கியிருந்தார். கடன் தொகையை அவரால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. வைப்பக அதிகாரிகள் நிலத்தை ஏலத்துக்குக் கொண்டு வந்தனர்.

ஆனால் அவ்வூர் உழவர்கள் அனைவரும் சன்னையாவுக்கு ஆதரவாக இருந்தனர். ஏறத்தாழ 4 குறுக்கம்(ஏக்கா) உள்ள அந் நிலத்தை 15 காசுக்கே ஏலம் கேட்டனர். அதிகாரிகள் வேறு வழியில்லாமல் ஏலத்தையே நீக்கிவிட்டனர். என்னே சிற்றூர்ப்புற மக்களின் கட்டுப்பாடு!

பையனின் காதுக்காக நாய்களைக் கொன்றனர் !

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில், லாபியுன்டே நகர் உள்ளது. அந்த வீட்டில் உள்ள 7 அகவைச் சிறுவனின் காதைப் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் வளர்க்கும் 2 நாய்களில் ஒன்று கடித்து விழுங்கி விட்டது. சிறுவனின் காதை அறுவை செய்து ஒட்டவைத்துவிட எண்ணினர் மருத்துவர்கள். அதற்காக நாயைக் கொன்று அதன் வயிற்றிலிருந்து அந்தக் காதை எடுத்துச் சிறுவனுக்குப் பொருத்த விரும்பினர். ஆனால் எந்த நாயின் வயிற்றில் காது இருக்கும் என்று தெரியாததால், இரண்டு நாய்களையுமே கொல்ல நேர்ந்தது. கொன்ற நாய்களில் ஒன்றின் வயிற்றில் உள்ள காதை எடுத்து அவனுக்கு ஒட்ட வைத்தனர். இங்கானால் அவ்வாறு நடக்க விடுவார்களா? எண்ணிப் பார்க்க வேண்டும்.

சட்ட மன்ற நாகரீகம் !

மேற்கு வங்காள சட்ட மன்றத்தில் மே மாத இறுதியில் ஒரு நாள் நிகழ்ச்சியின் பொழுது காரசாரமான வாயாடல்கள் நடந்தன. உறுப்பினர்கள் அடிதடியில் இறங்குமளவிற்குக் கலவரங்கள் நடந்தன. அக்கால் பெண் உறுப்பினர் ஒருவர் தம்முடைய செருப்புகளையே கழற்றி எடுத்துக் கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை நோக்கிச் சென்றாராம். நல்லவேளையாக அவரை மற்றவர்கள் தடுத்து விட்டனராம். என்னே அரசியல் நாகரீகம்!

பாராளுமன்ற அவமதிப்புக்குத் தண்டம்!

மே மாதம் 3-ஆம் கிழமையில் சிங்கப்பூர் பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர்க்கும் அவருடைய தொழிலாளர் கட்சிக்கும், சிங்கப்பூர் பாராளுமன்றம் 15,000 தாலர் தண்டம் வழங்கியது.

எதிர்க்கட்சித் தலைவர் ஆசிரியராக உள்ள ஒரு செய்தித்தாளில் பாராளுமன்றத்தின் உரிமைக்குழு பற்றி, முன்னுக்குப் பின் முரணாகவும், திரிபாகவும், தவறான செய்திகளைக் கொண்டும் ஒரு கட்டுரை வெளியிடப் பெற்றிருந்ததாம். அந்தக் கட்டுரையை வெளியிட்ட குற்றத்திற்காகவே, பாராளுமன்றம் அத் தண்டனையை வழங்கியிருந்தது. நம் நாட்டில் ஆனந்த விகடன் இதழுக்குத் தண்டனை வழங்கி விட்டு நடந்த கலவரங்கள் நமக்கு நன்றாகத் தெரியுமே!

வலிப்பு நோயுள்ளவர்கள் மனநிலை குன்றியவர்கள் ஆகார் !

1976-ஆம் ஆண்டு மணவிலக்குச் சட்டத்தில் வலிப்பு நோயுள்ளவர்கள் மனநிலை குன்றியவர்களுடன் சமமாகக் கருதப் பெற்றிருக்கின்றனர். இவ்வாறு இருவரையும் ஒன்றாக மதிப்பிடுவது தவறு என்கிறார் புகழ்பெற்ற நரம்பியல் மருத்துவர் பி. இராமமூர்த்தி என்பவர்.

"மாந்தனின் மூளையில் உண்டாகும் ஒரு வகைத் தாக்கந்தான் வலிப்பு நோய் வருவதற்குக் காரணமாக உள்ளது என்று இக்கால மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் மெய்ப்பித்திருக்கின்றனர். முறையான மருத்துவப் பண்டுவம் மேற்கொண்டால் இந் நோயுற்றவர்களில் 70 விழுக்காட்டினர் நலமடைய வழியுண்டு. இந் நோயினால் தாக்கப் பெற்றவர்கள் மற்ற பொதுவானவர்களைப் போலவே உடல் மற்றும் மன ஆற்றல்களில் வலிவானவர்களே!

திருவள்ளுவர், மறைமலையடிகள் - மாவட்டங்களா ? வேண்டாம் ! வேண்டவே வேண்டாம் !

சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக்-கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் -என ஆளும் மனநிலைகளிலேயே போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டதற்கும் சரி,

—அதன் பின்னர் மாவட்டந்தோறும் மறுக்க-வியலாச் சிலரின் பெயரை வைத்துப் போக்குவரத்-துக் கழகங்கள் நிறுவப்பட்டிருக்கிற பொழுதும் சரி,

—அதற்கான ஊதிய நோக்கம் இல்லாமல் அச்செயல்கள் செய்யப் பெறவில்லை.

நல்ல தமிழ்ப் பெயர்களையும், தமிழக வரலாற்றின் செயல்வீரர்களின் பெயர்களையும் உந்து வண்டிகளில் கண்டமட்டிலேயே முழு நிறை-வடைகிற நம்மால் அப் பின்புலத்தைப் பார்க்க இயலாமலும், பார்க்க மறுக்கிற உணர்வுமே வருகிறது.

ஆனல் மாந்த இனம் ஒன்று வேறோர் இன மக்களிடம் அடிமைப்பட்டுப் போவதற்கான உட்-காரணமே பொருளியல்தான் என்பதை நன்கு ஆய்ந்து உணர்ந்து கொண்டால், தெளிவடைய-லாம்.

பொருளியல் சுரண்டலுக்காகவே எந்த ஓர் இனமும், மற்றோர் இனத்தை அடிமைப்படுத்துகிறது.

அவ்வகையில் தமிழினம், தன் நாட்டுச் செல்-வத்தை, விளைச்சல்களை, உருவாக்கப் பொருள்-களைப் பிற பல்வேறு இனங்களுக்கும் வாரிக் கொடுத்தது பழைய வரலாறு.

—இன்று உலகின் அனைத்து இனங்களும் தமிழகத்தில் வந்து *சுரண்டிப் பிழைக்க வழியமைத்துத் தருகிறது*, தமிழகம்! அ’தாவது இன்-றைக்கு *இத் தமிழகத்தைச் சுரண்டிப் பிழைக்கும் ஆளும் கூட்டம்!*

இவ்வகையில் மேலே கூறப்பட்டதுபோன்ற பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப் பெற்றதும், வெளிநாட்டு, உலக வங்கிக் கடன் வாங்குவதற்கே! —உலக வங்கிக் கடன் குறிப்-பிட்ட எண்ணிக்கைகள் உள்ள வண்டிகள் ஓடி-னலே கிடைக்கும்; அதற்கு மேலே ஓடும் பொழுது அது மறுக்கப்படும். —மேலும் குறிப்பிட்ட வண்டிகள் குறிப்பிட்ட தொலைவிற்கு ஒரு நாளில் ஓடியாக வேண்டும். எனவே நகருக்குள்ளும், பிற ஊர்களுக்கும் இடையில் பல வண்டிகளை L.S.S. (Limited Stop Service) எனும் பெயரில் முறை எண்ணிக்கையை (Trips) அதிகப் படுத்தியும் ஓட்டுகின்றனர். வெளியிலிருந்து வெறுமனே பார்ப்பவர்களுக்கு, வெளிநாடு களிலிருந்து கடன் பெறுவதோ, உலக வங்கிக் கடன்பெறுவதோ ஆக்கமான நிலைகளுக்கு நல்லது-தானே எனத் தெரியும். உண்மை அதுவன்று,

—பொதுவாக வெளிநாட்டுக் கடன் என்பது பல் வகையிலானது. இந்த இந்தியச் சிறைக்-கூடத்தைப் பொறுத்த அளவில், —51-விழுக்காடு இந்தியாவோ, இந்தியாவில் உள்ள முதலாளி-களோ பங்காகச் சேர்ந்து, எச்ச 49-விழுக்காடு மூலப்பணத்தைப் பிறநாடுகளிடமிருந்து பெறுவது.

—ஆம் மூலப் பணத்திற்கான, ஆளை விழுங்-கும் வட்டியும், ஊதியப் பங்கீடும் அந்நாட்டைச் சாரும்.

சான்றாக, ‘Ind-Suzuki’ எனும் அண்மைகால மிதியுந்து (Motor-Bi-cycle) இந்திய TVS-குழுமத்தின், சப்பானிய Suzuki குழுமத்தின் கூட்டுறவு வெளிப்பாடாகும்.

இக்கூட்டு வெளிப்பாட்டிற்குப் பகரமாக அந்த Suzuki வண்டியின் சப்பானிய உருவாக்க விற்பனை விலை ஏறத்தாழ உரு.4000. அதை இந்தியா-விற்குள் கொண்டு வருவதற்கும், வரிக்கட்டணங்-களும் ஏறத்தாழ இவ் வண்டியின் விலையைப் பன்மடங்கு உயர்த்திக் கூட்டி உரு. 20000.க்கு ஆகும் படி இந்த இந்திய வல்லாளுமை அரசே செய்துவிட்டது.

அதே நிலையில் இங்கு சப்பானியக் கூட்டோடு உருவாகும் அவ் வண்டியின் உருவாக்க விலை ஏறத்தாழ உரு. 4000. ஆனல் இதன் விற்பனை விலை - சப்பானிய ’சுசுகி’-வண்டியைவிடக் குறை-வானது என விளம்பரப்படுத்தப் பெற்றது ஏற-தாழ உரு 16000.

ஒரு வண்டியின் வழி வெளித்தெரிகிற ஊதியமே உரு. 8000. இந்த உருபாவை TVS-குழுமமும், Suzuki- நிறுவனமும் பங்கு போட்டுக்-கொள்கின்றன. இங்குப் பங்கீட்டுக்குத் தடை ஏதும் கூறாமல் இருக்க அதன் ஊதியத்தில் ஒரு பங்கீடு இந்திய ஆளும் கும்பலுக்குக் கொடுத்து வாயடைக்கப் பெறுகிறது.

கடந்த 86-ஆம் ஆண்டு மட்டும் இவ் வண்டி-வகையில் இரண்டிலக்கம் வண்டிகள் விற்பனை-யானதாக TVS-குழுமம் வேறு கொட்டம் அடித்-துக் கொள்கிறது,

அப்பொழுது ஊதியம் எவ்வாறு பங்கிட்டுக் கொள்ளப்படும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

நஞ்சூட்டிக்கொல்லும், 'புதிய' கொள்கைகள்! --(தொடர்-2)

புதிய மருந்துக் கொள்கை!

இன்றைக்குப் புதியதாக நடைமுறைக்கு வந்துள்ளதே இந்தப் புதிய மருந்துக் கொள்கை.

''இந்திய மருந்துத் தொழில் துறைக்கும் அதேபோல மருந்துக் குழுமங்களில் முதலீடு செய்பவர்களுக்கும் இதைவிட (இப் புதிய மருந்துக் கொள்கையைவிட) ஒரு சிறந்த 'கிறித்துமசு பரிசு' இருக்க முடியாது. 'இந்தக் கொள்கை முற்போக்கானது; அறிவு சார்ந்தது; வளர்ச்சிக்கு வழியமைப்பது; மற்றும் உருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டது' என விளக்கப் படுகிறது. பொதுவாக மருந்துக் குழுமங்களுக்கும், சிறப்பாக வெளிநாட்டு மருந்துக் குழுமங்களுக்கும் இந்தக் கொள்கை ஒரு நல்வாய்ப்பு (Lucky) என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை'',

—என்று 22-12-86—திசம்பர் 'இந்தியன் எக்சுபிரசும்',

''இந்திய நாட்டு மக்களின் உயிர்களா? அல்லது அவ்வப் பொழுது அரசு அறிமுகப்படுத்துத் தடைகளினால் தடைப்படும் மருந்து நிறுவன வணிகர்களின் ஊதியமா?—என்பதில் அரசு வணிகர்களின் ஊதியத்தையே முகாமையாகக் கருதியுள்ளது'',

என்று, கேரள உயர் அறமன்ற தலைமை நடுவர் திரு. **சுப்பிரமணிய போத்தி** மே, 1983-இல் தீங்கான மருந்துகளைத் தடைசெய்யக் கூடிய தீர்ப்பில் கூறியதும்,

-புதிய மருந்துக் கொள்கையின் உட்சாரத்தை விளங்கிக் கொள்ள போதுமானவையாகும்.

மருந்தும், தேவையும்

சரியான வகையில் உணவோ, உழைப்புக்கேற்ற ஊட்டச் சாரமோ, நல்ல குடிநீரோ, தூய்மையான காற்றோ இல்லாததுதான் உடல் நலக் குறைவுக்கு அடிப்படைக் காரணங்கள்,

100-க்கு 60-விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே உழலவே,

100-க்கு 30-விழுக்காட்டினர் வீடே இல்லாமல் சாலைகளையே வீடாகக் கொண்டிருக்கவே,

100-க்கு 60-விழுக்காட்டினர்க்கு ஒருவேளை சோறு கிடைப்பதே அரிதாக இருக்கிற நிலையிலே,

இயல்பாக நோய்கள் மக்களைக் கவ்வுகின்றன. நோய்கள் வாராமல் இருப்பதற்கான அடிப்படையான உணவுப்பொருளை அனைத்து மக்களுக்கும் வழங்காமல், நோய்களுக்கு மருந்து கொடுப்பதும், அதற்கென ஆயிரக்கணக்கான குழுமங்களை உருவாக்குவதும்-புண்ணுக்குப் புனுகுபூசுவதாகும்.

அனைத்து மக்களுக்கும் நல்ல குடிநீரையும், உணவுப் பொருள்களையும், கொடுத்துக் கடுமையான உழைப்பையும் தவிர்ப்போமானாலே 80-விழுக்காட்டு நோய்களை அடியோடு ஒழித்துவிடலாம்.

இந்தியாவில் மருந்துத் தொழில்!

இந்தியாவின் மருந்து உருவாக்குநர்களை மூன்று வகையாகப் பகுக்கலாம்.

1. வெளிநாட்டுத்துறை,
2. இந்தியத் தனியார்துறை,
3. இந்தியப் பொதுத்துறை (நடுவண் அரசு நடத்துவது.)

இந்திய விடுதலைக்குப் பின்,

இந்துசுத்தான் தடுப்பு மருந்துக் குழுமம் (Hindustan Antibiotics Ltd), இந்துசுத்தான் மருந்தக, மருந்தாளுகைக் குழுமம் (Hindustan Drugs and Pharmaciticeuals Ltd.) எனும் இரு நிறுவனங்களும் சோவியத்து அரசின் கூட்டோடு நடத்தப்பட்டன, இவ்விரு குழுமங்களும் இந்தியாவின் 68.2-விழுக்காட்டு மருந்துகளை உருவாக்கினாலும், அம் மருந்தை மாத்திரைகளாக்கும் பணியைத் தனியார்துறைகளுக்குக் கொடுத்து, தனியார்துறையினர் கொள்ளை ஊதியமடிக்க வழியமைத்துத் தருகின்றன.

வெளிநாட்டு முலப்பண முதலீட்டை விழுக்காட்டளவில் 40-ஆகக் குறைப்பதாகக்காட்டி, வெளிநாட்டு முலப்பொருள்களைக் கொண்டு உருவாக்கும் மருந்துகளின் ஊதியத்தையும், ஆளுமை உரிமையையும் அவ் வெளிநாட்டு நிறுவனங்களுக்கே அளிக்கிறது. இதை **'இந்தியமாக்கம்'** (Indianised) என்று வேறு பறையடித்துக் காட்டுகிறது.

இதனால் முலப்பணம் குறைவான நிலையிலேயே ஏறத்தாழ மூன்று மடங்குகள் ஊதியம் பெற்றுக் கொள்கிற வசதிகளை இந்த இந்திய இராசிவ் அரசு செய்து கொடுத்துள்ளது.

இது கடந்தகால நிலைகளாக இருக்க, இன்றைக்குப் 'புதிய மருந்துக் கொள்கை' என்ற போர்வையில் இந்த வெளிநாட்டுக் குழுமங்கள் உருவாக்கும் மருந்துகளை விக்கப்படுத்தி, அதையே அதிகமாகப்பெருக்க வழியமைக்கின்றது, இந்த அரசு.

இதனால் கோடிக்கணக்கான உருவாக்களைச் சுரண்டிக்கொண்டு செல்லவும், அதில் தரகு பெற்றுக்கொள்ளவுமான நக்கல் பிழைப்பையே செய்துவருகிறது இந்த இந்திய அரசு.

தேவையற்ற மருந்துகள்!

இன்றைய மருந்துப் பயன்பாட்டில் 85-விழுக்காட்டு மருந்துகள், தேவையற்றனவும், பயனற்றனவும் இன்னும் சொன்னால் உடல் நலத்துக்குக் கெடுதல் செய்யவல்லனவுமாகும்.

இந்தியாவில் ஏறந்தாழ 40,000-வகை மருந்துகள் பயன்படுத்ததில் உள்ளன.

Scanned with CamScanner

இவை யாவும் மக்களின் பணத்தைச் சுரண்டி ஏப்பம் விட்டுக் கொழுக்கின்றனவே தவிர, சிறிதும் மக்கள் உடல் நலத்திற்குப் பயன்படுவன அல்ல,

ஊட்ட மருந்துகள் (Tonic) என்ற பெயரில் கோடிக்கணக்கான உருபாக்களை சுரண்டிக் கொண்டு செல்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள்.

'வாட்டர்ப்ரீசு காம்பவுண்ட்' எனும் மருந்தின் விலை: உரு. 24. ஆனால் அதில் கலக்கப்பட்ட மருந்துகளின் விலையோ ஓர் உருபாகூட இருக்காது.

அந்த மருந்தின் ஒரு கரண்டியில் 3 அயிரச் சிறு (Milligram) இரும்பு ஊட்டமே உள்ளது. பெண் ஒருத்திக்கு நாளொன்றுக்கு 50- அ.சி. இரும்பு ஊட்டம் தேவை. 5-காசிற்கு விற்பனை செய்யப்படும் சிறுதொழிலக மருந்துகளில் 200அ. சி. இரும்பு ஊட்டம் உள்ளது. இதேபோல்-தான் அனைத்து வெளிநாட்டுக் குழுமங்களும் ஏமாற்றுகின்றன.

இது போன்றே குடிப்புகள் உடல் ஊட்டத்திற்கு என்று ஆண்டிற்கு 15-ஆயிரம் கல்லெடை (Ton) உருவாக்கப்படுகின்றன. மொத்தவிற்பனை-யில் 53-விழுக்காடு ஆர்லிக்சே ஆகும்.

போர்ன்விட்டா, பூஸ்டு, புரோட்டினெக்சு, காம்பிளான், டிரோட்டிநியூல்சு—போன்ற பல குடிப்புகள் வெளிநாட்டுக் குழுமங்களாலேயே உருவாக்கப்படுகின்றன. ஓர் ஆர்லிக்சு புட்டியில் ஊட்டச்சாரத்தின் (Vitamin) மதிப்பு 3-காசுதான். அதிலுள்ள அனைத்துப் பொருள்களின் மொத்த மதிப்பு ஓரிரு உருபாவாக இருக்கலாம். ஆனால் ஓர் ஆர்லிக்சு புட்டில் உரு. 21/-இற்கு விலையாகிறது. மருத்துவர்களும் அதை ஏதோ உணவுபோல் பரிந்-துரைக்கின்றனர்,

உயிர்ச்சார (Vitamin) மருந்துகளும் அப்படியே. நம் உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சாரங்களும் உணவுப் பொருள்களிலேயே இருக்கின்றன! உடலின் தன்மைப்படி குறிப்பிட்ட அளவிற்குமேல் ஊட்டச்சாரமாக இருந்தாலும் அது வீணே. உடலின் தேவைக்கு அதிகமான உயிர்ச்சாரம் கழிவாகப் போய்விடும். ஆனால் உயிர்ச் சாரங்கள் நிறைய சாப்பிடவேண்டும் என அறிவிப்புச் செய்வதோடு, கோடிக்கணக்கான உருபாக்களின் விளைச்சலைக் கழிவறைகளுக்கு அனுப்பிவிட்டு, ஊதியத்தைப் பங்குபோட்டுக் கொள்கின்றன, மருந்துக் குழுமங்கள்.

தீங்குகள் விளைவிக்கும் மருந்துகள்!

உடலுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்துகள் மிகுதியாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.

இரு வகையான், இரு நோய்களுக்கான மருந்-துகளை ஒரே மருந்தாக செய்து விற்பனை செய்வதாக விளம்பரப்படுத்தும் மருத்துகள் நிறைய விற்பனையாகின்றன. அவை அறி-வியலுக்குப் புறம்பான நிலையில் வெவ்வேறு வகையான நோய்களை உண்டுபண்ணிவிடுகின்றன.

மேலும், வெளிநாடுகளிலே தடைசெய்யப்பட்ட மருந்துகள் இந்தியாவிற்குள் மிக அதிகமாக நுழைக்கப் படுகின்றன. மெக்சோபாம் (Mexaform) என்ற மருந்து பக்கவலி நோயை உருவாக்குவ-தால், தடைசெய்யப்பட்டது. ஆனால் இந்தியாவில் வயிற்றுப் போக்கிற்காக அது பரவலாகப் பயன்-படுத்தத்தில் உள்ளது.

இதே போன்று குளோரோசுட்ரெப் (Chlorostrep), நோவால்சின், அகான்டிரில் போன்றவை கொடுமையன நஞ்சுடையன. அவை மிக எளிதாக அனைத்துக் கடைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும் இது போலும் உருவாக்கப்படும் மருந்துகளை ஆய்வுசெய்யவும் மிகக் குறைவான-வர்களே பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மருந்துப் பொருள்களின் உருவாக்கமும் அரசும்!

இவ்வகையில் முதலாளிகளின் ஊதியத்தையே கருத்தில்கொண்டு மக்களின் உயிர்க்கொலைக்கு ஊக்கமளிக்கும் நச்சு மருந்துகளைப்பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல், இருக்கின்ற மருந்துகளையே அதிகமாக உருவாக்கத் திட்டமிட்டிருப்பதும், அந்த வகையில் முதலாளிகளின் ஊதியத்திற்கு வழிய-மைத்துத் தருவதுமே இப்புதிய மருந்துக் கொள்-கையின் இன்றைய திட்டமாகும்.

இன்றைய மக்கள் குமுகத்தின் கொடுமையான நோய்களைப் போக்குகின்ற மருந்து உருவாக்கக் குறைவுபற்றிக் கவலைகொள்ளாமல், அமைந்து இருப்பதே இப்புதிய மருந்துக் கொள்கையின் திட்டம்.

இயல்பாகவே இம் முதலாளிகளின் கொள்ளைக்கு வழியமைக்கும் நிலையிலேயே உருவாக்க அளவை வரையறை செய்திருக்கிறது அரசு. ஆனால் தேவையான மருந்துகளை அதற்கும் குறைவாகவும், ஊதியம் தரும் பொருள்களை அதிக-மாகவும் உருவாக்குகின்றன குழுமங்கள். சான்றாக,

பொருள்:	அரசு வரையறை அளவு (கல்லெடை)	உருவாக்கம் (கல்லெடை)
ஐ.என்.எச். (எலும்புருக்கி-நோய்க்குப் பயன் படுவது,)	80	52

பி.ஏ.எசு. (எலும்புருக்கி-நோய்க்குப் பயன் படுவது.)	110	94
புரோட்டினெக்சு ஊட்டக் (குடிப்பு)	110	290

எப்படி, பார்த்தீர்களா?

எனவே தேவையான நோய்க்கான மருந்துகள் கிடைக்காமல் எத்தனையோ குடும்பங்கள் சீரழிகின்றன.

மேலும் மருந்து விற்பனையை உறுதி செய்வது நோயாளியோ, நோயோ அல்ல.

மருத்துவரும், மருந்துக் குழும முதலாளிகளுமே.

மருத்துவர்களுக்குப் பரிசுப் பொருள்கள், விருந்துகள், கையூட்டுகள் என வழங்கி, மருந்து விற்பனை பெருக்கப் படுகின்றது.

(தொடரும்)

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

—இது ஒரு வகை.

—இதுபோல் பல்வேறு வகைகளில், தமிழக விளைச்சலும், உழைப்பு ஊதியமும், தமிழக முதலாளிகளாலும், இந்தியத் தரகு அரசாலும், பன்னாட்டு மூலப்பணத்தாலும் சுரண்டி வாரிக் கொண்டு எடுத்துச் செல்லப்படுகிறது.

இன்னும் சோவியத்து நாட்டுச் சுரண்டல் என்பது மிக அதிர்ச்சியானது! அண்மையில் இந்தியாவிற்கு வந்த சோவியத்துப் பொதுச் செயலர் திரு. கொர்பசேவ், தாம் இந்தியாவிற்கு 2800/- கோடி உருபா கொடுத்ததாக அறிவித்துச் சென்றார்.

அத் தொகை இலவயமாகக் கொடுக்கப்பட்டதாக எவரும் தவறுதலாகக் கணக்கிட்டு விட வேண்டாம்.

(அண்மைக் காலமாக மக்களின் வரிப் பணத்தையும், மக்களின் உழைப்பையும் சுரண்டி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் ஆளும் கும்பல், இந்தியாவின் ஏதேனும் தொழிலகமோ, கட்டிடமோ அச் சுரண்டல் பணத்தில் கட்டித் திறந்து வைப்பதை ஏதோ அந்தக் கும்பல் நாட்டிற்கு 'தானம்' செய்ததாக (அர்ப்பணித்ததாக) —காட்டிக் கொள்ளும் (யார் விட்டுப் பணத்தை யார் அர்ப்பணிப்பது)—நாகரிகத் திருட்டுத்தனத்தைப் போன்று)—சோவியத்து நாடு அளித்த கோடிகள் 17-ஆண்டிற்குள் கட்டக்கூடிய கடன்தொகை-அதற்கான வட்டியே இந்தியா 17-ஆண்டுகளில் ஏறத்தாழ 1800-கோடி உருபா கட்டுதல் வேண்டும்.

அந்த மூலப் பணமும், வட்டியும் விளைச்சல் பொருளாகவே உருசியாவிற்கு வேண்டுமாம்!

குறிப்பாகச் சருக்கரையும், பழங்களும்!

—அதுவும் சோவியத்து நாடு

விலை குறிக்கும் அளவிற்கு.

—எனவே சோவியத்து விலை குறித்த 90 காசுகளுக்கே ஒரு கிலோ சர்க்கரை அனுப்பப்படுகிறது. (இங்கு கிலோ சர்க்கரை பங்கிட்டுக் கடையில் 4.80; பொதுக் கடைகளில் 5.30 முதல் 6 வரை.) என்னே அட்டூழியம்!

—இதுபோலும் ஏராளமான சுரண்டல்கள் நாளும் புதுமை புதுமையாக நடந்துகொண்டேயிருக்கின்றன.

—இவ் வகையில்,

போக்குவரத்துக் கழகங்களுக்கான கடன் தொகையும் அதே நிலைதான்.

—அதன் வட்டியே நம்மை விழுங்கிவிடும்.

அவ் வட்டி இருபதாண்டுக் கடனடைப்பில் 2-விழுக்காடு வட்டி-என்ற முறையில் அளிக்கப்படுமானால்,

—அத்தொகை இந்த நக்கல் பிழைப்புக் கொண்ட இந்தியச் சிறைக்கூடத்தில் ஆளும் கும்பல், அதைப் பத்தாண்டுகளில் கட்டுதல் வேண்டுமென்றும், 10-விழுக்காடு வட்டி என்றும், தமிழகத்திலிருந்து சுரண்டி வட்டி ஊதியத்தையும், ஆண்டு எல்லை மூலப் பணத் தேக்கத்தையும் செய்து சுரண்டிக் கொடுக்கிறது.

—இதை எதிர்த்துக் கேட்டால், ஒருமைப் பாட்டுக் குந்தகம் விளைவிக்கும் கொடுநெறியர்கள் என நமக்குப் பட்டம் இட்டு, குண்டர் சட்டத்தில் உள்ளே போடுகின்றனர்.

மேலும்,

—இதனால் பெறப்படும் கடன் தொகையும், பாதி அளவே அக் கழகங்களுக்குச் செலவிடப்படுகின்றன. எஞ்சியது இங்குள்ள 'நக்கிப் பிழைக்கும்' ஓநாய்களின் வாய்க்கரிசியாகின்றது.

—இதேபோல்தான், மாவட்டப் பகுப்புகளும்,

—செலவுத் திட்டத்தை அதிகப்படுத்தவும்,

—அதைக் காட்டிச் சுரண்டவுமே இந்த மாவட்டப் பகுப்புகள்.

தொடக்கத்தில் 'பெரியார் மாவட்டம்'—எனப் பெயர் வைத்தபொழுது, நமக்கெல்லாம் 'பெரியார்' மீது இருந்த பற்றினால், தமிழனைச் சுரண்டினால் தாழ்வில்லை என விட்டுவிட்டோம்.

பின்னால்,

சாதியப் பாகு பாட்டில்,

காமராச (நாடாருக்கு)- என அந்தச் சாதியினர் வாழ் பகுதிக்கும். வ. உ. சிதம்பரம்

Scanned with CamScanner

(பிள்ளைக்கு)-என அந்தச் சாதியினர் வாழ் பகுதிக்கும், கட்டப்பொம்ம(நாயக்க)ருக்கு — என அந்தச் சாதியினர் வாழ்பகுதிக்கும், முத்துராமலிங்க(த் தேவ)ருக்கு-என அந்தச் சாதியினர் வாழ் பகுதிக்கும் —எனப் பகுக்கப்பெற்ற மாவட்டங்களுக்கென அந்த அந்தச் சாதியினர் மகிழ்ந்து போனர்களே தவிர்த்துத் தமிழக மக்கள் நலனுக்காக இல்லை என்பதை முழுமையாக நாம் எண்ணுதல் வேண்டும்.

முத்துராமலிங்க(த் தேவ)ர் போன்ற சாதி வெறியர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மாவட்டத்தையும், பெரியார் மாவட்டத்தையும்—எந்த வகையில் ஒப்பிடுவது.

இந்நிலையில் அவர்கள் போக்கிலேயே, உண்மையில் அண்ணாத்துரை பிறந்து வாழ்ந்த மாவட்டமாகிய செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அண்ணா மாவட்டம் எனச் சங்கராச்சாரி பீடத்திற்காகப் பெயர் வைக்காமல், திண்டுக்கல் பகுதியில் அமைத்தது, அந்த அந்தச் சாதி வெறிகளுக்கு வழியமைத்துத் தருவதாகவே உள்ளது.

இந்நிலையில் ஒதுக்கப்பட்ட எஞ்சிய நிலங்களில் திருவள்ளுவருக்கும், மறைமலையடிகளாருக்கும் மாவட்டம் அமைத்து, **சுரண்டிக் கொழுப்பதற்கு வழியமைத்துத் தருவது முழு மடத்தனமாகும்.**

தமிழ்ப் பெயராக அமைவதே ஒரு பெரும் வெற்றி எனக் கருதும், வறட்டு மொழியியல், இனவியல் பற்றாளர் இவற்றையும் கணக்கில் கொண்டு,

தமிழ் நிலத்தை, தமிழக மக்கள் நலத்தை, தமிழ் மொழி வளத்தைக் கட்டிக் காக்க,

இந்தச் சுரண்டல் விலங்குகளை வெட்டி வீழ்த்திப் புதிய தமிழகத்தைப் படைப்பதில் சிந்தித்தல் வேண்டும். எனவே தாம், இன்றைய தமிழகத்தில், திருவள்ளுவருக்கோ, மறைமலையடிகளாருக்கு மாவட்டங்கள் வேண்டவே வேண்டாம்!

—விடுதலை வேட்பன்.

ஓர் அறிவிப்பு!

'*தமிழ்நிலம்*' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

ஒரு முதலாளிய உரையாடல்!

அமெரிக்க மருந்து முதலாளி

நண்பரே! எங்களுடைய புதிய கண்டுபிடிப்பான இந்த மருந்துகளை 10000 எலிகளுக்கும் 100 குரங்குகளுக்கும் கொடுத்து ஆய்வு செய்ய வேண்டும். அவற்றிற்குக் கெடுதல் வரவில்லையானால் நாங்கள் இந்த மருந்தை மக்களுக்காக உருவாக்கப் போகிறோம்; உங்கள் நாட்டில் எலிகள் அதிகமாக உள்ளதே; அவற்றில் 10000 எலிகளைப் பிடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா? எவ்வளவு செலவு ஆகும்.

இந்திய மருந்து முதலாளி:

நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம் நண்பரே! நங்களே அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தித் தருகிறோம். எலிகளைவிட மலிவாக எங்கள் நாட்டில் மக்களிடமே அந்த ஆய்வை நடத்திவிடலாம். இதில் எங்களுக்கும் ஊதியம் கிடைத்துவிடுமே.

—ஓராண்டுக்குப் பின்,—

அமெரிக்க மருந்து முதலாளி:

நீங்கள் கொடுத்த புள்ளி விளத்தங்களுக்கு மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். மிக்க நன்றி.

இந்திய முதலாளி:

இதில் நாங்கள்தாம் நன்றிகூற வேண்டும். எங்கள் மருந்து உருவாக்கத்திற்கும், எங்கள் நாட்டின் மருத்துவர்களுக்கும் அளவற்ற ஊதியத்தைப்பெறச் செய்துவிட்டீர்கள். மிக்கநன்றி!

"வந்தே மாதரம்"!

கடந்த 22—5—87 அன்று தொலைக்காட்சியில் சோ எழுதி இயக்கி நடிக்கும் 'வந்தே மாதரம்' என்ற தொடரில் பெண்களை இழிவு செய்யும் இந்துமதக் கருத்து பரப்பபபட்டது. அதில் சோ "பெண்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகை அறிவாளி; அடுத்தது 99% பெண்கள்," என்று கூறுகிறார். அஃதாவது பெண்கள் என்றாலே முட்டாள்கள் என்று பொருள் கூறுகிறார். மேலும் அவரது குப்பைக் கருத்துக்குச் சான்றாகப் பழம்பெரும் குப்பை பாரதக் கதையைக் காட்டுகிறார். ஒரு துலையின் ஒரு தட்டில் தீ, கூரான கத்தி, கொடும் நஞ்சு ஆகியவற்றையும் மறுதட்டில் ஒரு பெண்ணையும் வைத்தால் துலை சம நிலையில் இருக்கும் என்று சாந்தி பருவத்தில் வியாசர் கூறுகிறாராம். இதுவே சோவிற்கும் சான்றாக அமைகிறது. 'வந்தே மாதரம்' என்றால் 'தாய்க்கு வணக்கம்' என்ற பொருள் 'சோ'வுக்குத் தெரிந்திருக்கும். இப்படிப்பட்ட பார்ப்பனியக் கருத்துகளைப் பரபபத்தான் ஒருமைபபாடு என்று ஏய்க்கின்றார்கள். இன்னும் எத்தனை நாளைக்கு இவர்கள் கொட்டம் நீடிக்குமோ?—தமிழ் முகிலன்.

பறம்பை அறிவன் பக்கம் !

1. தேசிய இன விடுதலைக்குக் காலம் கனிந்துள்ளது !

'இந்தியா'வில் தான் தமிழ்நாடு இருக்கிறதா? இல்லை. தமிழ்நாடு தனித்து விடப்பட்டதா? இந்த ஐயப்பாடுகள் எழ, எழ பழைய வீரவரிகள், தமிழர்க்கு உதவாத வீண்சொல்லடுக்குகள் ஆகி வருகின்றன.

இலங்கையில் தமிழீழம் நெருப்புக் கோடுகளால் வரையப் பெற்றுளது. குருதித் துளிகள் விதைக்கப் பெற்று, வீரவரலாறு அறுவடையாகின்றது.

தமிழரிடையே ஒற்றுமை முயற்கொம்பே அன்று! அது முயன்றால் உருவாகும் செயலே. தமிழ்நாட்டின் ஒற்றுமையை வளர்க்கும் உறுதி கொண்ட இளைஞர்கள், பெண்கள், சாதி, மத, கட்சிகளைத் தூக்கி எறிந்திடுக!

தமிழ்நாடெங்கும் தமிழின ஒற்றுமைக்கான அமைப்புகளைக் கட்டுங்கள். தமிழர்கள் மேல்; கீழ் என்ற வகுப்புகளாக உள்ளார்கள். இது அமைப்பின் உள் முரண்பாடு, தீர்க்கப்பட வேண்டிய ஒன்று. இதன்மேல் நாம் அழுத்தமான கருத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆயினும், நம் நலன்களை அடியோடு பாதிக்கின்ற தேசிய இனக் கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருத்தல் இயலாது. ஏனெனில், இக் கொடுமைகள் பாட்டாளித் தமிழர்களையே தாக்கக் கூடியனவாக உள்ளன.

நாம் கடந்த காலப் போராட்டங்களில் வெற்றிகளையும் தோல்விகளையும் மாறிமாறிச் சந்தித்து வருகிறோம். 'புறங்கொடாத தோள்' கொண்டவர் என்று இலக்கியம் படைக்க விரும்புகின்றோம். அதற்காக இறுதி வெற்றியைப் பெறுதல் வேண்டும்!

இப்போது காலம் தேசிய இன விடுதலைக்காகக் கனிந்துள்ளது.

உ. த. மு. க.
முகவை மாவட்டம்.

2. காலத்தைக் கைப்பற்ற இது நல்ல காலம் !

இராசீவ் ஆட்சிக் கட்டிலேற, அவர் தம் அன்னையின் 'சாவு' காரணமாகி விட்டது. அவர் பரம்பரைப் பெருமையை நிலைநாட்டப் போதிய ஆள், அம்பு, அதிகாரம் உண்டு. ஆனாலும் அவர்க்கு அமைந்த அமைப்பு நாட்டுக்குப் பல 'புடம் போடும்' நிலைமையைத் தந்துள்ளது. குறிப்பாகத் **'தேசிய இனச் சிக்கல்'** அவர்தம் அன்னையின் கருவிலேயே இந்தியாவிற்குத் தோன்றிவிட்டது. இச் 'சிக்கல்' வெளியிலிருந்து வருவதாக எண்ணுவது பேதைமை. அப்படி ஆட்சியிலிருப்பவர் கூறினால், அது திறமைக் குறைவு என்ற பழிப்புக்குக் காரணம் ஆகிவிடும்! ஆட்சியில் ஏற்பட்ட உள் தவறுகள்—உள் நாட்டுச் சிக்கல்கள்—என்று கொண்டு நேரிய முறையில் சிந்தித்தல் வேண்டும்.

அரியலூர் மருதையாற்றில் தொடர்வண்டியில் வந்த மக்கள் பலியானதற்குக் காரணம் 'பேய், பிசாசு' என நடுவணரசின் அமைச்சர் சிந்தியா கூறியுள்ளார். சிக்கல் ஏற்படக் கொடுமை நிகழக் காரணமான உண்மையைத் தேட அறிவியல் சிந்தனை வேண்டும். சிந்தியாவின் மூட நம்பிக்கை பழிகாரர்கள் தப்பித்துக் கொள்ளவே பயன்படும். உண்மை உணர மறுக்கும் செயல், எண்ணம் மாறுதல் வேண்டும்! இவ்வாறே, தேசிய இனச் சிக்கல் 'வெளிநாட்டு ஆற்றல்' காரணமாக ஏற்படுவது என்ற குருட்டு நம்பிக்கையைப் பரப்புவதும் ஆகும்!

உள் நாட்டுக் குழப்பத்தை, எதிரி—வெளி நாட்டு எதிரி—பயன்படுத்துகிறான் என்பதும் கவனிக்கத் தக்கது.

3. அமெரிக்காவில் முருகன் கோயில் !

'தினமணி' பழைய இதழ் 15-4-'87-இல் ஒரு செய்தி. அது, 'அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் வாசிங்டனில் முருகன் கோயில் கட்டப் போகிறார்கள்; தமிழ்ப்பண்பாட்டு நடுவம் நிறுவப் போகின்றனர்.' என்பது

'தமிழர் சங்கம் முருகன் கோயில் கட்ட 11·5 ஏக்கர் இடம் வாங்கியுள்ளது. இதற்காக நான்கு இலக்கத்திற்கு மேல் உருபா செலவிட்டுள்ளனர். 150 அடி உயரக் கோபுரம் கட்ட 19·5 கோடி உருபா செலவிடத் திட்டமிட்டுள்ளனர். இச் சங்கத்தின் தலைவர் ஒரு மருத்துவர்; பால்டிமோரில் தொழில் புரிகிறார். பெயர். பர். கோபால் குருசாமி. இதற்கு அ க் க றை யோ டு உதவுகின்றவர்கள் கிருபானந்த வாரியாரும், எம். சி. ஆரும் ' என்று செய்தி கூறுகிறது.

தமிழின மேன்மை; பண்பாட்டு நலம் என்றதும் நாம் மகிழ்கிறோம். ஆனால், 'முருகன்' என்ற தமிழ், 'இந்து, ஆரிய அடிவருடி'களால் சிதைவுறுமே; அதற்காக 'இவ்வளவு பணம் கொட்டப்பட்டால்' வீணாகிவிடுமே என்ற மனத்துயர் உண்டாகிறது.

தமிழின மேன்மையும், பண்பாடும் மீண்டும் ஒருமுறை சுரண்டல் ஆரியத்தால், இந்துமதக் கலவையால் கலங்கப்பட்டுவிடக் கூடாது! தமிழர், தமிழர்க்குள் வேர்விட்டுள்ள இரண்டகப் பேர்வழிகளை அடையாளம் கண்டு கொள்ளுதல் வேண்டும்

நாட்டு நடப்புகள்:

மெய்யானவுணர்வு மேன்மையுற...

தேசம், தேசியம் இரண்டும் பிரிக்க முடியாதவை. இதைக் ஒப்புக் கொள்வதில் வேறுபட்ட கருத்தில்லை. ஆனால், ஆளும் கணத்தினர், ஆளப்படும் மக்களின் உணர்ச்சிகளை மதிப்பதில்லை. அதிகாரத் துய்ப்பு அவர்களிடம் போதையாகிப் பின்னர் அதுவே அவர்களின் 'அடிமைக் குணம்' ஆகிவிடுகின்றது. அடிமைப்படுத்துகிறவர் எவரும் ' அடிமைக் குணம் ' உடையவராய்ப் பிறர்க்கடிமையாகியே கிடப்பார்!

'விசயபாரதம்' என்ற இதழ் ஒரு கருத்தைக் வெளியிட்டது. அது:

"தேசம் இழக்கப்பட்டுவிட்ட காலத்திலும் நாட்டின் எல்லைகள் இல்லாமல் போகின்ற காலத்திலும் 'தேசியம் உயிர்வாழ முடியும்' உடல் இல்லாதபோது ஆதன் (ஆன்மா) இருத்தல் போல்! ஆனால், அது (ஆன்மா) தன்னை வெளிப்படுத்திக் கொள்ள உடம்பு தேவைப்படுவது போலவே தேசமும் தேவையாகும்"-என்பது.

இதனைத் 'தமிழ்த் தேசியம், பஞ்சாப் தேசியம், அசாம் தேசியம்'...என்ற கொள்கையோடு ஒப்பிட்டு 'விசயபாரதம்' ஏற்றுக் கொள்ளுமா?

'பாரததேசம், தேசியம்' என்பதை - வலிந்து திணித்த வல்லரசியத்தின் பிடியில் சிக்கிய அடிமையுணர்வே. மெய்யுணரத் தடையாகத் தமிழ்த் தேசியம், முதலிய தேசிய உணர்வுபெறுவதில் முட்டுக்கட்டையாகி விட்டது எனலாம்.

மாசுகோவில் நடந்த உலக இளைஞர் விழாவில் இந்தியக் குழுவினர் சிலர் தேசியக் கொடியைத் தாங்கிச் செல்ல மறுத்ததையும்...

கேரளத்தின் பள்ளிக்கூடத்தில் 'சனகணமன' 'தேசியப் பாடலை'ப் பாட மாணவர்கள் மறுத்ததையும் அதற்கான விளக்கத்தையும்...

--கண்டு 'நெஞ்சை உறுத்துவதாக'க் கூறும் 'விசயபாரதம்' ஆசிரியவுரை கண்டு நாம் இரங்குவோம்! 'தேசியப்பற்றை'ச் சரியான மெய்யுணர்தலோடு அணுக வேண்டும்!

பணத்திற்கு விலைபோகும் 'அறிவாளிகள்' தேசிய விளக்கம் கூறுவதைக் கண்டு நாம் 'இரங்குவதே' இயலும்.

முன்பு கோபியில் நடந்த குருபூசையில் சிந்தனைச் செம்மலான வழக்கறிஞர் ஒருவர் கலந்து கொண்டபோது, ஆர். எசு. எசு. சங்க நடை முறையையும் கட்டுப்பாட்டையும் வெகுவாகப் புகழ்ந்தாராம்; இந்து சமயத்தின் உலகளாவிய மெய்ம்மப் பெருமையை எந்த ஆற்றலாலும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது என்று கூறினாராம். இச்செய்தியையும் விசயபாரதம் வெளியிட்டுள்ளது.

இதைச் 'சிந்தனைச் செம்மல்' மறுத்துள்ளாரா ஏற்றுள்ளாரா என்பது தெரியாது! ஆனால், ஒன்று, நாம் விரிந்து பரந்த கண்ணோட்டமும் எச்சரிக்கையுணர்வும் கொண்டிருந்தால் மட்டுமே, தடுமாற்றங்களையும், விலை போகின்ற கொள்கைகளையும் கண்டறிந்து கொள்ளமுடியும்.

தமிழீழத்தின் விடுதலைக்கான குரலோடு வகுப்புப் போராட்டத்தை (Class Struggle) இணைக்கும் நாம், 'தன்னாட்சி, தனியாட்சி' பற்றிய சரியான புரிதலை மக்களிடம் எடுத்துச் சொல்லுதல் வேண்டும். 'தன்னாட்சி' என்பது அடிமைத்தனத்திற்கும் தனியாட்சி என்பது 'உலக உறவற்ற' பிரிவினைக்கும் உரியன என்ற பொருள் கொள்ளப் படக் காண்கிறோம்.

இங்கே, மக்களின் விடுதலையுணர்வு வேர் கொண்டதாகப் போராட்டம் தொடருமாயின் இத்தகைய 'தடுமாற்றம்' தீர்ந்துபோகும். 'தனியாட்சி' என்பது, தீர்மானிக்கும் உரிமையோடு கூடிய உலக உறவைக் கொண்டது என்பதைப் புலப்படுத்தும் நடைமுறையை மேற்கொள்வதிலேயே உள்ளது.

மெய்யுணர்வு - சிந்தனைச் செம்மல்களைவிட நடைமுறையாளர்களிடையே அமைந்து வளரும் அதற்காக....நாம் நடைபயில்வோம்!

—பறம்பை அறிவன்.

கரவுக்குப் பலி!

இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது உணவு விடுதிகளின் உரிமையாளர் கழகத் தலைவர்கள் ஓர் அறிக்கை விட்டனர். தமிழ்நாடு அரசு உணவு விடுதிகளுக்கு விற்பனை வரி போட்டுள்ளது. இதனால் உணவுப் பொருள்களின் விலை அதிகமாகும். எனவே பொதுமக்கள் துன்பப்படுவார்கள். ஆகவே இந்த வரி விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர்கள் அவ்வறிக்கையில் தெரிவித்திருந்தனர். பொதுமக்களுக்கு நலம் செய்யும் அரசாகத் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டும் என்று வரியை விலக்கிக் கொண்டது அரசு. ஆனால் இப்போதோ உணவுப் பொருள்களின் விலைகள் திடுமென உயர்ந்துள்ளது. அரசும் அதைத் தடுக்க முயற்சி எடுக்கவில்லை. இராசீவின் புதிய பொருளியல் கொள்கையைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் நாடு தமிழகம் அன்றோ? ஐயோ தமிழகமே இன்னும் எத்தனைக் காலந்தான் இப்படி முதலாளிய கரவுக்குப் பலியாகப் போகிறாயோ?

—தமிழ்முகிலன்.

Scanned with CamScanner

இந்திய வெறி விடுவீர் !

எம்மினம் வேறு உம்மினம் வேறு
எம்மொழி யும்வேறு — உங்கள்
தம்மொழி யும்வேறு.

எம்நாடு வேறு உம்நாடு வேறு
எம்—உம் கலைவேறு — உணவுடை
எல்லா மேவேறு.

அதனுல் அயலார் நீங்கள் ; எம்மை
ஆளுதல் சரியன்று — நாங்கள்
அடிமை உமக்கன்று !

ஓரினம் மற்றோர் இனத்தை ஆண்டிட
உரிமை ஏதேது ? — ஆளுதல்
நெறிமுறை ஆகாது.

அவரவர் இனத்தை அவரவர் ஆள்வதே
அறநெறி தாகும் — உலக
அமைதியின் தூணும்.

எவரும் எவர்க்கும் அடிமை இல்லை
என்பது தான்நயமை —பிறரை
ஆண்டிடு தல் கயமை.

தனித்தனி இனவர சிங்கமைந் திருந்தால்
சண்டைகள் இருந்திடுமா ? — வீண்
சாவுகள் பெருகிடுமா ?

இங்கே நடக்கும் கலகம் சாவுகள்
எதனுல் ? எதனுலே ? — உங்கள்
இந்திய வெறியாலே !

எனவே வடவரே இனிமே லாகிலும்
எண்ணிப் பார்த்திடுவீர் ! செயற்கை
இந்திய வெறிவிடுவீர் !

-- பாவலர். சின்னப்பனுர்.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

1. இராசீவ் மேலும் இந்திய அரசின் மேலும் இக்கால் ஏற்பட்டுவரும், அரசியல், பொருளியல் குற்றச்சாட்டுகளிலும் குழப்பங்களிலும் மனம் செலுத்திக் கொண்டிருக்கும் பொதுமக்களைத் திசை திருப்புவது.

2. இந்தியா இலங்கைக்குச் சார்பாக இருப்பதாகக் கூறப்படும் கருத்தை நீக்குவது.

3. உலக அரங்கில் தமிழர்களுக்கு உதவினதாகக் காட்டிக் கொள்வது.

4. இலங்கைத் தமிழர்களின் பேரழிவால் மனங் கொதித்துப் போயிருக்கும் தமிழகத் தமிழர்களின் எழுச்சிகளையும் போராட்டங்களையும் தடுப்பது.

5. அண்மையில் நடைபெறவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலில் தமக்கு வாய்ப்பான ஒரு சூழலை உருவாக்குவது.

6. போராளிகளைத் தமக்குச் சார்பாக ஆக்கிக் கொள்வது.

7. என்றென்றும் தமிழீழம் கிடைக்காமல் இருக்க மறைமுகமாக இலங்கைக்குத் துணைநிற்பது.

இவற்றைவிட வேறு என்ன காரணங்களுக்காக இவ்வுதவியை இராசீவ் செய்திருக்க முடியும்? நீங்கள்தாம் எண்ணிப் பாருங்களேன்! O

உ.த.மு.க. வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு • 6

நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கிற உதவிகளை நாம் ஏற்றுக்கொள்வதை விடத்தவிர்ப்பதே நல்லது.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 87 TN/MS (C) 657

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5 . அருணுசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனுர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணுசலத் தெரு, சென்னை-5